சமூக நல ஆணையரக நிருவாக அலுவலர், சென்னை–15 அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.மா.சந்தானம், B.Sc.,

செ.மு.மூ.மு.எண் 5706/நிரு.4(1)/2019 நாள்:-26.04.2019

பொருள்:- பணியமைப்பு – சமூக நல ஆணையரகம், சைதாப்பேட்டை, சென்னை 15 – செல்வி.மு.தேவி, இளநிலை உதவியாளர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்ககம், தரமணி, சென்னை மாவட்டம் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை பூர்த்தி செய்து ஆணை வழங்குவது – சார்பு.

பார்வை:- 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.5349/PSD-G1/2017 நாள்:-04.10.2017.

2. சமூக நல இயக்குநர், சென்னை–15 அவர்களின் செ.மு.ந.க.எண் 30216/நிர்4(3)/2017 நாள்:-30.10.2017.

3.இயக்குநர் (ம) குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்ககம், தரமணி, சென்னை மாவட்டம் அவர்களின் ந.க.எண்.1095/இ1–2/2019 நாள்:-18.02.2019.

.........

ஆணை :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சென்னை மாவட்டம், தரமணி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்ககத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் செல்வி.மு.தேவி என்பவருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ல் பிரிவு 28 (1)ன்படி இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 09.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2015–2016க்கான தொகுதி–IV தேர்வு மூலம் நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்கின் நீதிப்பேராணைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

செல்வி.மு.தேவி, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு:- பணிப்பதிவேடு

ஒம்/–மா.சந்தானம்
நிருவாக அலுவலர்

பெறுநர்
செல்வி.மு.தேவி, இளநிலை உதவியாளர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்ககம், தரமணி,
சென்னை மாவட்டம். (உரிய அலுவலர் மூலமாக)

நகல்

1. இயக்குநர் (ம) குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்ககம், தரமணி, சென்னை மாவட்டம். (மேற்படி பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்).
2. இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி//

29/4/19

கண்காணிப்பாளர்.

26-4-19